<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006</u>

<u>தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு –ஆகஸ்ட்–2023</u>

<u>செய்திக்குறிப்பு</u>

1. **<u>ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்</u>**

ஆகஸ்ட் 2023–ல் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **01.08.2023** அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **20.06.2023** பிற்பகல் முதல் **28.06.2023** வரை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **<u>தேர்வுக் கட்டண விவரம்</u>**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/–மொத்தம் ரூ.195/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தவேண்டும்.

**மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 30.06.2023 மற்றும் 01.07.2023 ஆகிய நாட்களில் தேர்வுக்கட்டணத்துடன் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.500/– கூடுதலாக செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.**

3. **<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை</u>**

➢ <u>முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்</u>

- விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பள்ளிப்பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

➢ <u>ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்</u>

- ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.
- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்றினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

**இணைப்பு: தேர்வுக்கால அட்டவணை**

**ஒம்/–**
**இயக்குநர்**

இடம் : சென்னை–600 006
நாள் : 17.06.2023

**தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு**

**ஆகஸ்ட் – 2023**

**தேர்வுக்கால அட்டவணை**

| தேதி | நாள் | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 07.08.2023 | திங்கட்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | தமிழ் |
| 08.08.2023 | செவ்வாய்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | ஆங்கிலம் |
| 09.08.2023 | புதன்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | கணிதம் |
| 10.08.2023 | வியாழக்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | அறிவியல் |
| 11.08.2023 | வெள்ளிக்கிழமை | காலை 10 மணி முதல் 12 மணி வரை | சமூக அறிவியல் |

**ஒம்/-**
**இயக்குநர்**

**இடம்: சென்னை-6**
**நாள்: 17.06.2023**